பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

12 05 2024 **SUNDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தலில் நாளை நடைபெறும் நான்காவது கட்ட வாக்குப்பதிவுக்கு அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

2. மேற்குவங்க மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்களை திரிணாமுல் காங்கிரஸ் மேற்கொள்ளவில்லை என பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. நாடு முழுவதும் கட்டணமில்லா கல்வி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று **I N D I** கூட்டணியில் உள்ள ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் கூறியுள்ளார்.

4. தெற்கு காஸா பகுதியில் தாக்குதலை மேலும் தீவிரப்படுத்துவதாக இஸ்ரேல் கூறியுள்ளதை ஐ நா கண்டித்துள்ளது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

----- *இனி விரிவான செய்திகள்* ---

**<<<<<<<>>>>>**

மக்களவைத் தேர்தலில் நாளை நான்காவது கட்டமாக ஒன்பது மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 96 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்த தேர்தலை அமைதியாகவும், சுதந்திரமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் நடத்துவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

ஆந்திரா, தெலங்கானா, உத்தரப்பிரதேசம், மகாராஷ்ட்ரா உள்ளிட்ட 9 மாநிலங்கள் மற்றும் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் உள்ள தொகுதிகளில் நான்காவது கட்ட மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

பதற்றம் அளிக்கக்கூடியவை என கண்டறியப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கண்காணிப்பு கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன.

கோடை வெயிலின் தாக்கத்தை கருத்தில்கொண்டு, நிழற்குடைகள், குடிநீர் உள்ளிட்ட வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன. முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க வசதியாக சாய்தளங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வாக்குப்பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்துதரப்பட வேண்டும் என்று வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

ஆந்திரப்பிரதேச மாநில சட்டப்பேரவைக்கான தேர்தலும், மக்களவைத் தேர்தலுடன் இணைந்து நாளை மேற்கொள்ளப்படுகிறது.

மொத்தம் உள்ள 175 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 2 ஆயிரத்து 386 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இதேபோன்று, ஒடிஷா மாநிலத்தில் நடைபெறவுள்ள மக்களவை தேர்தலுடன் இணைந்து, 28 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் நாளை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

தெலங்கானாவில் தேர்தலுக்கான பாதுகாப்புப்பணியில் 73 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவல்துறையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும், தேர்தல் பறக்கும் படையினர் இதுவரை 320 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை தலைவர் திரு ரவிகுப்தா தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் மீறப்பட்டது தொடர்பாக 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<<<<<<<>>>>>

மக்களவைக்கு ஐந்தாவது கட்டமாக வரும் 20-ஆம் தேதி 49 தொகுதிகளுக்கு நடைபெறும் தேர்தலுக்கான பிரச்சாரத்தில் அரசியல் கட்சித்தலைவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, மேற்குவங்க மாநிலம் **Barrackpore** தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், ஷெல்யூல்டு வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டை ரத்து செய்வதற்கான முயற்சியை காங்கிரஸ் கட்சி மேற்கொள்ளும் என்று குற்றம் சாட்டினார்.

மாநிலத்தில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ், தொழில் வளர்ச்சிக்கான எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று கூறினார்.

சணல் உற்பத்தி, நூற்பாலைகள், காகிதம் மற்றும் பொறியியல் தொழில்களின் மையமாக இருந்த **Barrackpore-** உள்ள பல தொழிற்சாலைகள் தற்போது மூடப்பட்டுள்ளதாகவும், இதனால், தொழிலாளர்களின் குடும்பங்கள் வாழ்வாதாரம் இன்றி சிரமத்திற்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்க்கரை மற்றும் பருப்பு வகைகளை சணல் பைகளில் தைத்து, கொண்டு செல்ல வேண்டும் என பிஜேபி அரசு கட்டாயமாக்கியதாகவும் அவர் கூறினார்.

இந்த முயற்சியை திரிணாமுல் காங்கிரஸ் அரசு ஆதரிக்கவில்லை என்றும், இதனால் சணல் உற்பத்தி செய்த விவசாயிகளும், தொழிற்சாலைகளும் பெரிய அளவில் பாதிப்புக்குள்ளானதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி, உத்தரப்பிரதேச மாநிலம் **Raebareli** தொகுதியில் இன்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

**<<<<<<<>>>>>**

நாடு முழுவதும் 24 மணிநேரமும் மின் விநியோகம் உறுதி செய்யப்படும் என்றும், ஏழை எளிய மக்களுக்கு 200 யூனிட் வரை இலவசமாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் **I N D I** கூட்டணியில் உள்ள ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மக்களவைத் தேர்தலில் தமது கூட்டணியுடன் இணைந்து பத்து வாக்குறுதிகளை அளிப்பதாக கூறினார்.

நாட்டில் உள்ள அனைவருக்கும் கட்டணமில்லா கல்வி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இதனால் 18 கோடி மாணவர்கள் பயன்பெறுவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்காக, பத்து லட்சம் அரசு பள்ளிகள் உருவாக்கப்பட்டு, தரமான கல்வி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிஜேபி அரசு கொண்டுவந்த அக்னி வீர் போன்ற திட்டங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு உகந்தது அல்ல என்றும், இளைஞர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, அதனை திரும்பப்பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு அரவிந்த் கெஜ்ரிவால் கூறினார்.

**<<<<<<<>>>>>**

ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகளுடன் தொடர்புடைய ஒருவரை பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர்.

பந்திப்புரா காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட சோதனையின்போது அவர் கைது செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அந்த நபரிடமிருந்து ஏராளமான ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

**<<<<<<<>>>>>**

நாடுமுழுவதும் மின் தேவை அதிகரித்து வரும் சூழ்நிலையில், தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, தொடர் ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருவதாக மின்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மாநில அரசுகளுக்கும் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<<<<<<<>>>>>**

தெற்கு காஸா பகுதியில் இஸ்ரேலிய படைகள் தாக்குதலை மேலும் தீவிரப்படுத்துவதாக அறிவித்துள்ளது.

இதனையடுத்து, ரஃபா பகுதியில் உள்ளவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அந்நாட்டு ராணுவம் உத்தரவிட்டுள்ளது.

ரஃபாவில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்டோர் தற்போது உள்ளதாகவும், ஏற்கனவே 3 லட்சம் பேர் இப்பகுதியில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுள்ளதாகவும் இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

ஐ நா-வின் பாலஸ்தீனத்துக்கான அகதிகள் முகாமில் இஸ்ரேல் தனது தாக்குதலை காஸா பகுதியில் தீவிரப்படுத்தப்போவதாக கூறியுள்ளதை வன்மையாக கண்டித்துள்ளது.

ஐ நா-வின் மீட்புப்பணிகள் முகமைக்கான ஆணையர் திரு **Philippe Lazzarini** விடுத்துள்ள சமூக வலைதள செய்தியில், காஸா-வில் போர் தொடங்கியதிலிருந்து பாதுகாப்பான இடத்திற்கு செல்ல முடியாமல் அப்பகுதி மக்கள் தவித்து வருவதாக கூறியுள்ளார்.

ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் திரு சார்லஸ் மைக்கேல், விடுத்துள்ள செய்தியில், ரஃபா பகுதியில் இஸ்ரேல் ஆக்கிரமிப்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று கூறியுள்ளார்.

சர்வதேச மனிதாபிமான நடைமுறைகளையும், சட்டத்தையும் மதித்து இஸ்ரேல் செயல்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே, காஸா சுகாதாரத்துறை அதிகாரிகள், போர் தொடங்கியதிலிருந்து இதுவரை 34 ஆயிரத்து தொள்ளாயிரத்து 71 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

**<<<<<<<>>>>>**

இந்தோனேஷியாவின் மேற்கு சுமத்ரா மாகாணத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் 28-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

நான்கு பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

அந்நாட்டின் தேசிய பேரிடர் மேலாண்மை முகமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நேற்று நள்ளிரவு முதல் பெய்துவரும் கனமழையால் இம்மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்கள் பெரிய அளவில் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாக தெரிவித்துள்ளது.

16 பாலங்கள் மற்றும் 84 குடியிருப்பு பகுதிகள் மழை வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதாகவும், சாலைகளில் நீர் தேங்கியுள்ளதால் அப்பகுதிகளுக்கு செல்வது கடினமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, ஆப்கானிஸ்தானில் பெய்துவரும் கனமழையால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 315-ஆக அதிகரித்துள்ளது.

ஆயிரத்து 600-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல், பெய்துவரும் கனமழையால் பல்வேறு இடங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

போர்கால அடிப்படையில் மீட்புப்பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

இந்த மழை வெள்ளத்தால் பல மருத்துவமனைகளும் நீரில் மூழ்கியுள்ளதால், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிப்பதிலும் தாமதம் ஏற்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரேசில் நாட்டிலும் சனிக்கிழமை முதல் கனமழை பெய்துவருகிறது.

மழை வெள்ளத்தில் சிக்கி, 136 பேர் உயிரிழந்தனர். 806 பேர் காயமடைந்துள்ளனர்.

காணாமல் போன 125 பேரை தேடும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

பிரேசில் மழை வெள்ளத்தில் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், 81 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர் என்றும் அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

92 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தால் கடுமையாக சேதமடைந்துள்ளன.

ஆறுகளில் வெள்ளப்பெருக்கெடுத்து விவசாய நிலங்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

நாளை வரை மழை நீடிக்கும் என்று பிரேசில் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 5 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணி வெற்றிபெற்றது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த ராஜஸ்தான் அணி 5 விக்கெட் இழப்பிற்கு 141 ரன் எடுத்தது.

பின்னர் 142 ரன் இலக்குடன் விளையாடிய சென்னை அணி, 18 புள்ளி இரண்டு ஓவரில் ஐந்து விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 145 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

---

மற்றொரு போட்டியில் பெங்களூரு – தில்லி அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள ஆட்டத்தில் டாஸ் வென்ற தில்லி அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

-----------------

பாரிஸ் ஒலிம்பிக் மல்யுத்த போட்டியில் பங்கேற்க இந்தியாவின் **Aman Sehrawat** தகுதி பெற்றுள்ளார்.

துருக்கியின் இஸ்தான்புல்லில் நடைபெற்று வரும் உலக மல்யுத்த ஒலிம்பிக் தகுதிச் சுற்றுப் போட்டியின் ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியதன் மூலம், அவர் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளார்.

அரையிறுதிப் போட்டியில், **Aman Sehrawat,** கொரியாவின் **Chongsong Han-**ஐ வென்றார்.

பாரிஸ் ஒலிம்பிக் மல்யுத்த போட்டியின் ஆடவர் பிரிவில் பங்கேற்க தகுதி பெறும் முதலாவது இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

**<<<<<<<END>>>>>**